ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:

## ஸ்ரீரங்கநாச்சியார், ஸ்ரீநஞ்ஜீயர் - வருஷ திருநட்சத்திரம் - பங்குனி - உத்திரம்





ஸ்ரீரங்கநாச்சியாரும், ஸ்ரீபட்டர் திருவடியில் ஸ்ரீநஞ்ஜீயரும்

## ஸ்ரீரங்கநாச்சியார்

### தனியன்

பால்குநோத்தரபல்குந்யாம் ஸம்பூதாம் ஸ்ரியமாஸ்ரயே /
விஷ்ணோர் திவ்ய பதாம் போஜ கடகாம் தத்பதாஸ்ரிதாம் //

நமஸ் ஸ்ரீரங்கநாயக்யை யத்ப்ரூவிப்ரமபேதத: /
ஈஸே ஸிதவ்ய வைஷம்ய நிம்நோந்த மிதம் ஜகத் //

### வாழித்திருநாமம்

#### பெரிய பெருமாள்

திருமகளும் மண்மகளும் சிறக்க வந்தோன் வாழியே
செய்யவிடைத் தாய்மகளார் சேவிப்போன் வாழியே
இருவிசும்பில் வீற்றிருக்கு மிமையவர்கோன் வாழியே
இடர்கடியக் பாற்கடலை எய்தினான் வாழியே
அரிய தயரதன் மகனாயவதரித்தான் வாழியே
அந்தரியாமித்துவமு மாயினான் வாழியே
பெருகி வரும் பொன்னி நடுப் பின் துயின்றான் வாழியே
பெரியபெருமா ளெங்கள்பிரா னடிகள் வாழியே.

#### பெரிய பிராட்டியார்

பங்யப் பூவிற் பிறந்த பாவை நல்லாள் வாழியே
பங்குனியில் உத்திரநாள் பாருதித்தாள் வாழியே
மங்கையர்கள் திலதமென வந்த செல்வி வாழியே
மாலரங்கர் மணிமார்பை மன்னுமவள் வாழியே
எங்களெழிற் சேனைமன்னர்க் கிதமுரைத்தாள் வாழியே
இருபத்தஞ்சுட்பொருள் மாலியம்புமவள் வாழியே
செங்கமலச் செய்யரங்கம் செழிக்க வந்தாள் வாழியே
சீரங்கநாயகியார் திருவடிகள் வாழியே.

### மங்கள ஸ்லோகம்

லக்ஷ்மி சரண லாசக்ஷாங்க ஸாசக்ஷாச்ச்ரீவத்ஸ வசக்ஷஸே /
சேக்ஷமங்கராய ஸர்வேக்ஷாம் ஸ்ரீரங்கேஸாய மங்களம் //

திருநாமங்கள் - நாச்சியார், பெருமாள் நாச்சியார், ஸ்ரீரங்கநாச்சியார், பெரியபிராட்டியார்

சிஷ்யர்கள் - அநந்தகருட, விஷ்வக்ஸேநாதிகளான நித்யமுக்தர்கள்

ஒரு பங்குனி உத்திரநாளன்று நம்பெருமாளும் பிராட்டியும் சேர்த்தி சேவயில் எழுந்தருளியிருக்கும்பொழுது ஸ்வாமி எம்பெருமானார் கத்யத்ரயத்தை (ஸரணாகதி கத்யம், ஸ்ரீரங்க கத்யம், ஸ்ரீவைகுண்ட கத்யம்) அரங்கேற்றினார்.

அதேபோல் கம்பரும் தாம் இயற்றிய இராமாயணத்தை ஒரு பங்குனி உத்திரநாளன்று அரங்கேற்றியதாக சிலர் சொல்லுகிறார்கள். அவர் ஸ்ரீநரசிம்மரை பற்றி பாடியபொழுது மேட்டு அழகியசிங்கர் வாயார சிரித்து அதை ஆமோதித்த தாக கல்வெட்டுகள் சொல்லுகின்றன. இவர் ஸ்ரீமந்நாதமுனிகள் காலத்தில் வாழ்ந்ததாக பலர் கூறுகிறார்கள்.

## ஸ்ரீநஞ்ஜீயர்

### தனியன்

பால்குநோத்தரபல்குந்யாம் ஜாதம் வேதாந்தி நம் முநிம் *I*
ஸ்ரீபராஸரபட்டார்ய பாதரேகா மயம்பஜே*II*

நமோ வேதாந்த வேத்யாய ஜகந் மங்கயஹேதவே *I*
யஸ்ய வாகம்ருதாஸார பூரிதம் புவ நத்ரயம் *II*

### வாழித்திருநாமம்

தெண்டிரைசூழ் திருவரங்கம் செழிக்க வந்தோன் வாழியே
சீமாதவனென்னும் செல்வனார் வாழியே
பண்டைமறைத் தமிழ்ப்பொருளைப் பகரவந்தோன் வாழியே
பங்குனியி லுத்திரநாள் பாருதித்தான் வாழியே
ஓண்டொடியாள் கலவிதனை யொழித்திட்டான் வாழியே
ஒன்பதினனயிரப்பொருளை யோதுமவன் வாழியே
எண்டிசையும் சீர்பட்ட ரிணையடியோன் வாழியே
எழில் பெருகும் நஞ்சீயரினிதூழி வாழியே.

திருவவதாரஸ்தலம் - திருநாராயணபுரம் (மேல்கோட்டை)
திருநாமங்கள் - வேதாந்தி, நிகமாந்தயோகி, ஸ்ரீமாதவா், நஞ்ஜியா்
ஆசார்யா் - பெரியபட்டர்
சிஷ்யர்கள் - நம்பிள்ளை, ஸ்ரீஸேனாபதி ஜீயர்

இவர் செய்தருளின க்ரந்தங்கள் - திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரப்படி வ்யாக்யானம், திருப்பாவைக்கு ஈராயிரப்படி வ்யாக்யானம், திருவந்தாதிகளுக்கும், கண்ணிநுண்சிறித்தாம்புக்கும் திருப்பல்லாண்டுக்கும் உரை ரஹஸ்யத்ரய விவரணமான நூற்றெட்டு, ஸரணாகதி கத்ய வ்யாக்யானம்.
இவர் திருவாய்மொழிக்கும், கண்ணிநூண்சிறுத்தாம்புக்கும் செய்துள்ள வ்யாக்யானங்கள் மட்டுமே இப்பொழுது நமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

திருவாய்மொழி காலசேஷபம் நூறுமுறை செய்ததாலே இவர் ஸதாபிஷேகம் பண்ணினாரென்று ப்ரஸித்தமானார்.

## இவருடைய பெருமைகளை எடுத்து உரைக்கும் உபதேசரத்தினமாலை பாசுரங்கள்

### 39ஆம் பாசுரம்

பிள்ளான் நஞ்சீயர் பெரியவாச்சான்பிள்ளை
தெள்ளார் வடக்குத்திருவீதிப் - பிள்ளை
மணவாளயோகி திருவாய்மொழியைக்காத்த
குணவாளரென்று நெஞ்சே கூறு.

### 42ஆம் பாசுரம்

தஞ்சீரை ஞானியர்கள் தாம்புகழும் வேதாந்தி
நஞ்சீயர்தாம் பட்டர் நல்லருளால் - எஞ்சாத
ஆர்வமுடன் மாறன் மறைப்பொருளை யாய்ந்துரைத்தது
ஏரொன்பதினாயிரம்.

### 47ஆம் பாசுரம்

நஞ்கீயர் செய்த வியாக்கியைகள் நாலிரண்டுக்கு
எஞ்சாமையாவைக்கு மில்லையே - தந்சீரால்
வையகுருவின் தம்பி மன்னுமணவாளமுனி
செய்யுமவை தாமும் சில.

### 50ஆம் பாசுரம்

நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை
யைன்பர். அவரவர்தம் மேற்றத்தால் - அன்புடையோர்
சாற்று திருநாமங்கள் தானென்று நன்னெஞ்சே
ஏத்ததனைச் சொல்லி நீ யின்று.

## வேதாந்தி என்ற பெயர் வரக்காரணம்

இவருடைய இயற்பெயர் மாதவாச்சாரியார். இவர் வேதாந்தங்களில் மிகவும் வல்லவராக இருந்ததால் வேதாந்தி என்று அழைக்கப்பட்டார். இவர் அத்வைதத்தில் சிறந்த அறிஞராய் விளங்கினார்.

## ஸ்ரீநஞ்ஜீயர் என்று பெயர் வரக்காரணம்

எம்பெருமானார் திருநாடு எழுந்தருளுவதற்கு முன்னர் பட்டரை அழைத்து `மேல்நாட்டில் வேதாந்தி என்றொரு மிகச்சிறந்த வித்வான் இருக்கிறார். அவரைத் திருத்தி நம்ஸம்பரதாயத்திற்குக் கொண்டு வரவேண்டும்' என்று கூறினார். இதனை நிறைவேற்ற பட்டர் மேல்நாட்டுக்கு யாத்திரை மேற்கொண்டார்.

வேதாந்தியை சந்திப்பதற்கு அங்கு இருந்த சிலர் மாறுவேடத்தில் அந்தணர்போல் சென்றால்தான் பார்க்க முடியும் என்று கூறினார்கள். அந்தணர் வேடத்தில் சென்று அவருடன் வாதப்போர் செய்தார். ஒன்பது நாட்கள்வாதம் நடந்தது. பத்தாம் நாள் வேதாந்தி விசிஷ்டாத்வைத மதமே சிறந்தது என ஒப்புக்கெகாண்டு பட்டர் திருவடிகளில் சரணடைந்தார். பிறகு பட்டர் இவருக்கு பஞ்ஜசமஸ்காரங்களை பிராஸாதித்து ஸ்ரீரங்கம் திரும்பினார்.

ஏழைகளுக்கு உணவிடுதலே இல்லறத்தின் தலையாய அறம். அதை செய்யத்தவறிய மனைவியோடு வாழ்தல் தாகாது என்று முடிவு செய்து துறவறம் மேற்கொண்டு ஸ்ரீரங்கம் வருகிறபொழுது அனந்தாழ்வானைக் கண்டார்.

முன்பு பெரும் செல்வந்தராய் வேதாந்தி வாழ்ந்திருந்தமையை அனந்தாழ்வான் நன்கு அறிந்வராதலால் அவரை நோக்கி `வேர்த்த போது குளித்து, பசித்த போது உண்டு, பட்டர் திருவடிகளே சரணம் என்றிருந்தால் உம்மைப் பரமபதத்தில் இருந்தும் தள்ளி விடுவாகேளா? நீர் இப்படித் துறவு மேற்கொண்டு இருக்கவேண்டிய அசியமல்லை. இருந்தாலும் செய்து விட்டீர். திருமந்திரத்திலே பிறந்து, த்வயத்திலே வளர்ந்து, த்வயைக நிஷ்டராவீர்' என்று ஆசீர் வதித்தார்.

துறவுக்கோலத்தில் ஸ்ரீரங்கம் வந்து பட்டர் திருவடிகளில் விழுந்தபோது, பட்டர் `நம் சீயர் வந்தார்' என்று வாரி அணைத்துக்கொண்டார். அன்று முதல் நஞ்சீயர் என்ற திருநாமம் நிலைத்து விட்டது.

## நஞ்சீயரின் அளவற்ற ஆசார்ய பக்தி

1) ஒருமுறை பட்டர் பல்லக்கில் எழுந்தருளிய போது நஞ்சீயர் தாமும் பல்லக்கை தோளிலே வைத்துக் கொண்டு ஏளப்பண்ண முற்பட்டார். அப்போது பட்டர் `துறவியாகிய நீர் இப்படிச் செய்வது தகாது' என்று கூற நஞ்சீயர், `தேவரீருக்குக் கைங்கர்யம் செய்வதற்கு துறவரம் இடையூறு என்றால் அதை துறந்து விடுகிறேன்' என்றாராம். இதனால் துறவிகள் மற்றவர்களுக்குப் பணிவடை செய்யக்கூடாது என்கின்ற ஸாமான்ய தர்மத்தைவிட எந்தநிலையிலும் ஆசார்யனுக்கு பணிவிடை செய்வது என்ற விசேஷ தர்மத்திலேயே நஞ்சீயர் ஊன்றியிருந்தார் என்று தெரிகிறது.

2) பட்டர் கூரகுலோத்தமன் என்கிற ஊரில் எழுந்தருளியிருந்தபோது அங்கு நஞ்சீயர் அமைந்திருந்த நந்தவனத்தில் பட்டருடைய வரவால் இடையூறு ஏற்பட்டது என்று அங்கிருந்த ஏகாங்கிகள் சிலர் கூறினார்கள். இதைக்கேட்ட நஞ்சீயர் `நம்பெருமாள் திருகுழற்க்கற்றை சிக்கு நாறுகிறதென்றோ நான் நந்தவனம் அமைத்திருக்கிறேன்? அடியேனுடைய ஆசார்யரான பட்டருக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் இந்த நந்தவனம் பயன்படவேண்டும் என்பது என்னுடைய நோக்கம். அதற்கேற்ப நடந்து கொள்ளுங்கள்' என்று ஏகாங்கிகளைக் கடிந்து கொண்டார்.

3) நஞ்சீயருடைய மடத்திற்கு பட்டருடைய மூத்தபெண் வந்து இங்கு காய்ந்த சருகுகள் இருக்குமா? என்று கேட்க, நஞ்சீயரும் கண்ணுக்கு தெரிந்த மட்டில் சில இடங்கங்களில் பார்த்துவிட்டு இல்லை என்று சொல்லிவிட்டார். பிறகு ஓரிடத்தில் பார்த்தபோது சருகுகள் இருப்பதைக்கண்டு அவற்றை எடுத்துக்கொண்டு பட்டர் திருமாளிகைக்கு சென்றார். இதைப்பார்த்த பட்டர் `நீரே எடுத்து வரவேண்டுமா? யாரேனும் ஒருவரிடம் கொடுத்தனுப்பியிருக்கலாமே' என்று கேட்க, நஞ்சீயர் `முதலில் இல்லை என்று சொல்லிவிட்ட பாபத்தை நானே போக்கிக் கொள்ளவேண்டாமோ?' என்று பதில் சொன்னார். ஆசார்யருடைய குடும்பத்தினர் மீது பக்தியுடன் இருக்கவேண்டும் என்பதை செயலில் செய்து காட்டினார் நஞ்சீயர்.

## <u>நஞ்சீயரிடம் பட்டர் காட்டிய பேரன்பு</u>

பட்டர் நஞ்சீயரிடம் மிகவும் அன்புபூண்டவராக இருந்தார். அடிக்கடி திவ்ய பிரப்ந்த பாசுரங்களைச் சொல்லும்படி நஞ்சீயருக்கு நியமித்து அவர் பிரப்ந்தங்களைச் சொல்லுமழகை பட்டர் ரசிப்பது வழக்கம். ஒருநாள் பட்டர் அமுது செய்து கொண்டிருந்த போது, நஞ்சீயர் பாசுரங்கள் சொல்லக்கேட்டு கொண்டார். அப்போது நஞ்சீயர் **`என்திருமகள் சேர்மார்வனே யென்னுமென்னுடையாவியேயென்னும்'** (திருவாய்மொழி 7-2-9) என்று சேர்த்து அருளிச்செய்ய, அதைக் கேட்ட பட்டர் கையை உதறி `ஸ்ரீரங்கநாதா' என்று சொல்லி அனையிலேயே சாய்ந்துவிட்டார்.

என்திருமகள் சேர்மார்வனே என்றும் என்னுடையாவியே என்றும் பாரங்குச நாயகி கூறுகிறாள் என்றுதான் அந்நாள் வரை பொருள் சொல்லப்பட்டு வந்தது. ஆனால் நஞ்சீயர் என்திருமகள் சேர்மார்வனே என்று சொல்லபடுகின்ற என்னுடையாவியே என்கிறாள் பாரங்குச நாயகி என்னும் பொருள் படும்படி அருளிச்செய்தவுடன் பட்டர் உணர்ச்சி வசப்பட்டார். சில சமயங்களில் தமக்கு பதிலாக நஞ்சீயரையே காலக்சேஷபம் செய்யும்படி பட்டர் நியமித்ததுண்டு.

## <u>ஸ்ரீநஞ்ஜீயரின் இரண்டு சீரிய பணிகள்</u>

1) பின்னாளில் தோன்றப்போகும் வ்யாக்யானங்களுக்கு வழிகாட்டியாக இவர் மிகச்சிறந்த வ்யாக்யானங்கள் அருளிச்செய்தார்.

2) நம்பிள்ளையை தேடிக் கண்டுபிடித்து உலகுக்கு அறிமுகப்படுத்தினார். இவர் நூறுமுறை திருவாய்மொழி காலச்சேஷபம் செய்தார். நம்பிள்ளை மூலம் காலச்சேஷபம் செய்யும் பழக்கத்தை ஏற்படுத்தினார்.

## நஞ்சீயரின் இறுதிக் கால விருப்பங்கள்

நஞ்சீயர் நோய்வாய்ப்பட்டிருந்தபோது அவருக்கு இரண்டு ஆசைகள் இருந்தன.

1) அவர் நம்பெருமாளிடம் உமது சுயம் திருமேனியை அடியேனுக்குக் காட்ட வேண்டும் என்று பிராத்திதார். இதனை நிறைவேற்ற நம்பெருமாள் இவருடைய மடத்திற்கு புறப்பாடு கண்டருளி இவர் மட்டும் பார்க்கும்படி தம் சுயம் திருமேனியை இவருக்கு காட்டியருளினார். இது மற்ற ஆசார்யகளுக்கு கிடைக்கப்பெறாத ஒரு பெரும் பாக்கியம் ஆகும்.

2) திருமங்கையாழ்வார் அருளிச் செய்துள்ள துவிரிய மலருழக்கி (பெரிய திருமொழி 3ஆம் பத்து 6ஆம் திருமொழி) என்ற பதிகத்தை அரையர் சேவிக்க தாம் கேட்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். உடனே வரந்தரும் பெருமாளரையரை வரவழைத்து வந்து நஞ்சீயர் முன் அந்த பதிகத்தை சேவிக்கச் சொன்னார்கள். அப்பதிகத்தில் நான்காம் பாசுரத்தை அரையர் சேவித்த போது அப்பாசுரத்தைப்பற்றி சில வார்த்தைகள் பேசி நஞ்சீயர் அப்படியே பரமபதம் அடைந்தார்.

பெரியபெருமாள், பெரியபிராட்டியர், நஞ்ஜீயர் திருவடிகளே சரணம்.

**வாசிக தோஷ: சஷந்தவ்ய:**